600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மிகப் பெரிய அளவில் அது உருவாக வேண்டிய ஒரு நல்ல வாய்ப்பு. அதைப்போல, மதுரையில் ஒரு SIPCOT தொழிற்சாலை வருவதற்கும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தத் தொழில் முதலீடுகளைப் பொறுத்தவரையில் குறிப்பாக மதுரை, தூத்துக்குடியில் இருக்கக்கூடிய தொழில் வழித்தடம் Industrial Corridor–ஐ செம்மைப்படுத்தி, வரிசையாக நம்முடைய தென் மாவட்டங்களில் இந்தத் தொழில் மையங்கள் வரவேண்டும். சென்னை போன்ற நகரங்களில் தற்போது மிகவும் congestion ஏற்பட்டிருக்கிறது. ஒரு சமச்சீரான தொழில் வளர்ச்சி எல்லா மாவட்டங்களிலும் வரவேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். எனவே, இப்போது வந்திருக்கக்கூடிய முதலீடுகள் குறித்துப் பார்ப்போமென்று சொன்னால், அதிகமான முதலீடுகள் தென் மாவட்டங்களை நோக்கி வரத் தொடங்கியிருக்கின்றன. மதுரையும் நிச்சயமாக, அதில் மிகப் பெரிய முக்கியத்துவத்தைப் பெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

84—

கலையரங்கத்தைப் புதுப்பித்தல்

***3447—திரு. ப. கார்த்திகேயன்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தொகுதி, வேலூர் மாநகராட்சியில் உள்ள அண்ணா கலையரங்கத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அண்ணா கலையரங்கத்தினை ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் அண்ணா பன்னோக்கு கலையரங்கமாக புதிதாக மாற்றியமைக்க மாண்புமிகு

2023 மார்ச் 31]

முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு அனுமதி தந்தார்கள். அறிவிப்பு வெளியிடப்பட்டு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்ட நிலையில், அண்ணா கலையரங்கம் அமைந்துள்ள இடம், இந்திய தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வேலூர் கோட்டைக்கு மிக அருகில் உள்ளமையால், அத்துறையின் இசைவு பெற விண்ணப்பிக்கப்பட்டபோது அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. எனவே, அண்ணா கலையரங்கத்தைப் புதுப்பிக்கவோ, மாற்றியமைக்கவோ இயலாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய வேலூர் தொகுதியில் அண்ணா கலையரங்கத்தைப் புதுப்பிக்க தொல்லியல் துறை அனுமதி தரவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்து, தொரப்பாடியில் ஒரு ஏக்கர் அளவிற்கு இடம் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, அண்ணா கலையரங்கத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி இருக்கிற இடத்தை அப்படியே புதுப்பித்துத் தரவேண்டும். இன்றைய* computer *உலகத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக எத்தனையோ சாதனைகளைச் செய்து வருகிறார்கள். வேலூர் மாநகராட்சியின் மத்தியப் பகுதியில் இருக்கிற அண்ணா கலையரங்கத்தில் அரசு விழா, பொது நிகழ்ச்சி,* Cinema Theatre *எல்லாம் நடைபெற்று வருகின்றன. எனவே, தொல்லியல் துறை, அதை இடித்துக் கட்டுவதற்கு அனுமதி தரவில்லை. இருக்கிற இடத்தைப் புதுப்பித்துத் தந்தால் சிறப்பாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு, அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்த அண்ணா கலையரங்கம் என்பது, மிகப்*

பழமையான ஒன்று. அதைப் புதுப்பிக்க இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதை மாற்றி அமைக்கலாம் என்று திட்டமிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு போனபோதுதான் 10 கோடி ரூபாய் நிதி வழங்கினார்கள். ஆனால், அதை மாற்றியமைக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடத்திலும் இதுகுறித்து நாங்களும் இரண்டு, மூன்று முறை தொலைபேசியில் தொடர்பு கொண்டோம். அதற்காக மாற்று இடம் தேர்வு செய்கிறபட்சத்தில், எதிர்காலத்திலே அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்து தமிழ்நாட்டு மக்களுக்காகவும், ஏழையெளியவர்களுக்காகவும், தமிழ் சமுதாயத்திற்காகவும். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும், சிறுபான்மையின மக்களுக்காகவும் அயராது உழைத்த தலைவர், நம்முடைய தலைவர். வேலூர் மாநகரத்திலே அவர் நடக்காத இடமே இல்லை. அதனால்தான் அவருடைய பெயரால் நினைவு மண்டபத்தைக் கட்டி அவருடைய திருவுருவச் சிலையை அங்கே வைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமை என்பதுதான் இப்பொழுது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. அதற்கு அடுத்து, கட்டடங்கள் கட்டுவதற்கு, திட்டங்களைக் கொண்டு வருவதற்கு இடம் என்பது ஒரு பிரச்சினையாகிவிடுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி, மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*